முருகப்பெருமான் துணை

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கருணைக்கொண்டு கைப்பட எழுதிய நூலாகும் இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்**

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 569**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

1. ஓங்காரமே உயர் ஞானமே 20.04.2021, செவ்வாய்கிழமை
ஓங்காரக்குடில் படைத்து அருளுகின்ற
ஓங்காரன் என் சூட்சுமமே தவயோகமே
ஓங்கார ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானும் ஞான அறிவுரை ஆசி தன்னை
உலகமக்கள் பயனுற எடுத்துரைப்பேன்
தானதர்ம சக்தி கூடிய மக்களெல்லாம்
தரணியில் ஞானிகளாகும் வாய்ப்பு உண்டெனஉபதேசித்து
3. உபதேசித்து உண்மை ஞானம் காட்டுகின்ற
உன்நெறியே உலகை மாற்றும் நெறியப்பா
அபயமென உன்னை மக்கள் சரணடைந்துவிட்டால்
அழிவென்பது இந்த கலியில் அவர்கட்கு இல்லை என்பேன்
4. என்கவே பேரிடர் காலம் என்று தவித்து
இங்கும் அங்கும் அலைந்து பாதுகாப்பு தேடி
துன்பம் காணும் கலியுக மக்களே
தேசிகனெனும் மகா சக்தியை உலகநலம் கருதி
5. உலகநலம் கருதி ஆறுமுகன் அனுப்பியுள்ளேன்
உகந்தபடி அவன் திருவடி பற்றிவிட்டால்
ஞானமாக கலியில் பெரும் பாதுகாப்பு
நச்சுக்கிருமியையும் வெல்லும் மகாசக்தியாக உண்டாகும்
6. ஆகவே அரங்கன் திருவடி உயர் திருவடி ஆறுமுகன் என் அருளும்
ஆசியும் பாதுகாப்பும் நிறைந்த மலரடி பற்றி மகாமந்திர தீட்சை ஏற்று
மகான் உன்னை சரணடைந்தேன் என மிகையாக மக்கள் அரங்கன் வழி வந்துவிட்டால்
மண்ணுலகை ஆட்டி வதைக்கும் பேரிடர் துன்பம் அகன்றோடும்
7. பேரிடர் துன்பம் அகன்றோடி எங்கும்
பெரும் பாதுகாப்பும் இயற்கை பாதுகாப்பு
வறுமை பற்றாத வளமான சூழல்
வையகமே ஞானிகள் ஆளுமைக்கு உரியதாகி
8. ஆகியே ஞான ஆட்சிக்காலமும்
அரங்கன் வழிவழி தொண்டர் மூலம்
அகிலம் மாற்றம் கண்டு சிறப்புறும்
அறிவித்த ஞான அறிவுரை ஆசி முற்றே –சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.